ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642.

# திராவிடநாடு

மலர் 11. 19—10—52 இதழ் 16

## “நான்சென்ஸ்!”

[அரங்கண்ணல்]

நிமிர்ந்து நடைபோடும் அந்தப் புரவிகள், நீலத் திரை கடல் தாண்டி கொண்டுவரப்பட்டவை! கடலிலே ‘காற்றால்’ வந்த அவைகளுக்காகச் செலவழிக்கப்பட்ட செல்வம் கொஞ்ச நஞ்சமல்ல. காற்று வீச, பாய்மரக் கப்பல் ஏற்றி வந்த கரிய மிளகு மூட்டைகள் இவை! கண்களைப் பூக்க வைக்கும் மாணிக்க மணிகளைப் பார்த்தாயா? அவை, வடமலை தரும் வள்ளற் பொருள்கள். கண்ணைப் பறிக்கும் பொன்! வடமலையில் வளர்ந்த நாவல் மரத்தின் கனிச் சாற்றிலிருந்து உண்டானதாம்—கூறுகிறார்கள் ‘சாம்பூநதம்’ எனும் பெயர் சூட்டி. அவ்வளவு வளம் கொழித்ததாம், வடமலையில்!!

உள்ளத்தைக் கிள்ளும் சந்தனமும் அகிலும் பொதிகை மலை தந்த பரிசில்கள்! மலைகளுக்கு நாங்கள் என்ன மட்டமா? — என்று கடல் மாதா கர்ச்சிப்பது கேட்கிறதா உனக்கு? கன்னியரின் வாயைக் கவன மூட்டும் செம்பவளமும், ‘கண்மணி’யைக் கற்பனைக்கழைக்கும் முத்தும், கீழ்க்கடலும் தென்திசைக் கடலும் போட்டியிட்டுக் கொண்டு தரும் செல்வங்கள்! இவைகள் மட்டுமா? வெளியிடத்திலிருந்து, தமிழ் மாதாவுக்குச் செலுத்தப்படும் பாத காணிக்கையைக் கண்டாயா! பெருமித நடைபோடும் யானைக் கூட்டம், கங்கை நதிக்கரை, செலுத்திய திறை. களிறுகள் உலவும் அந்தச் செல்வக் களஞ்சியங்கள் காவிரியின் விளைச்சல்கள்! நுகரும் பொருள்கள் மலைபோல் குவிந்துள்ளனவே? அவை, ஈழமும், கடாரமும் (பர்மா) இன்முகத்தோடு அனுப்பும் குவியல்களப்பா! பனிநீர், குங்குமம், கருப்பூரம், பார்த்தாயா? இந்த அரிய பொருள்கள், சீன நாட்டிலிருந்து தமிழ் மண்ணுக்கு வரும் விற்பனைச் சாக்குகள்! இத்தனை செல்வங்களும் திரண்டு கிடப்பதால், வளைந்திருக்கும் தமிழ் மாதாவைப் பார். செல்வத்தைச் சுமக்க முடியவில்லை! அதனால் நிலத்தின் முதுகு நெளிகிறது! வளைகிறது!!

*

கடல் தாண்டி வந்த
குதிரைகள்.
மிளகுப் பொதிகள்.
மாணிக்கம்! பொன்!
அகில்! சந்தனம்!
முத்தும் பவளமும்!
கங்கைக் கரை யானை!
காழகத்துப் பொருள்கள்!
சீனச் செல்வம்!

இத்தனையும், குவிவதால், தமிழ் நிலம் வளைகிறதென்று, அழகாகக் கூறுகிறார், ‘பட்டினப்பாலை’ ஆசிரியர். கடியலூர் உருத்திரங்கண்ணனார். கரிகாற் பெருவளத்தானின் காலத்தில், இவ்விதம் கொழிக்கிறாளாம், தமிழ் மாதா! அவர் அதனை, ஆனந்தத்தோடு செப்பும், அழகிய வரிகளைப் பாருங்கள்:-

“நீரின்வந்த நிமிர்பரிப்
புரவியும்
காலின் வந்த
கருங்கறி மூட்டையும்
வடமலைப் பிறந்த
மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த
ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும்,
குணக்கடல் துகிரும்,
கங்கை வாரியும்,
காவிரிப் பயனும்,
ஈழத்துணவும்,
காழகத் தாக்கமும்
அரியவும், பெரியவும்
நெரிய ஈண்டி,
வளம்தலை மயங்கிய
நனந்தலை மறுகி...”

செந்தேன் குடிப்பது போலிருக்கிறதா! இவ்வளவு அழகாக, அன்றைய தமிழ் நிலத்தைப் படம் பிடிக்கிறார், புலவர். அவரது தமிழில், தமிழழகு மட்டுமா? தமிழ் நிலமே, காட்சி அளிக்கிறது! செல்வங் கொழிக்கும் தமிழ் மாதா தென்படுகிறாள்! அவளது மைந்தர்கள், நாவாய் ஏறி, திரைகடல் தாண்டி நானாவித நாடுகளுடனும் வாணிபம் நடாத்திய வகைகளையும் அறிகிறோம். நீர் தாண்டி வந்த புரவிகள்! சீனத்திலிருந்து வந்த குங்குமமும் கற்பூரமும்! கடாரம் தந்த நுகர் பொருள்கள்! கங்கை செலுத்திய யானைக் கூட்டம்! தமிழரின், வாழ்வு சோரம் போகாதிருந்த காலத்தைக் காட்டுகிறார் — புலவர். அலைகடல் கிழித்துச் சென்றான், தமிழ் மகன்! சிங்களத் தீவிலே விளையாடினான். கடாரம், அவனது காலடி பணிந்தது.. கங்கைக் கரை மிரண்டது அவனுக்கு! சீரும் சிறப்பும் பெற்ற தமிழ் மகன் நடாத்திய வாணிபம், அவனது திரு இடத்தின் மகிமையை உலகெங்கும் உணர்த்திற்று. வாள் ஒரு கையில்! வாணிபம் மற்றோர் கையில்!!—இரண்டும் ஏந்தி, தமிழ் நிலத்துக்கு, தனது வெற்றி மாலைகளைக் காணிக்கையாக்கிக் கொண்டிருந்தான். வீரம் அவனது மூச்சு! நேர்மை அவனது பேச்சு!! அஞ்சினோரை அடக்கியதில்லை. மிஞ்சினோர் துடுக்கை அறுக்காமல் விட்டதில்லை. வாணிபத்திலே, வஞ்சனை தெரியாது அவனுக்கு. எத்திப் பிழைக்க எண்ணியதில்லை!

“தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதும் மிகைகொளாது
கொடுப்பதும் குறை கெடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்...”

பண்பு, அவனுடையது! அத்தகைய கண்ணியம், அவனது நிலத்தின் புகழை, அலைகடலுக்கும் அப்பால் பரவச் செய்தது! ஈழம், கடாரம், சீனம், யவனம் முதலிய நாடுகள், அவனுடைய வியாபாரப் பகுதிகள். அந்தந்த நாடுகளிலிருந்து வந்த பொருள்களால் தமிழ் மாதாவின் முதுகு வளைந்தது மட்டுமல்ல! தனது மடியில் விளைந்த பல பொருள்களையும் அந்த நாடுகளுக்கு வாரி வழங்கியிருக்கிறாள், திராவிடத்தாய்! மேற்கு மலை தந்த வைடூரிய மணிகள் மெசபத்தோமியாவின் கண்களைக் கவர்ந்தன! தமிழ்நாட்டு மலைக்குடிகள், மலைப்பக்கங்களில் கிழங்குகள் தோண்டும் போது அந்த மணிகளைக் கண்டெடுத்தனராம்—கூறுகிறது, நமது ‘குறுந்தொகை’.

“......குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த
கானவன் கிழங்கினோடு
கண்ணகல்
தூமணி பெறூஉம்”

அந்த மணிகளை அயலார், மகிழ்வோடு வாங்கிச்சென்றனர்! ஐரோப்பிய கண்டம், தமிழ் நிலத்து ஆடைகளை அணிந்து மகிழ்ந்தது! கிரீஸ், ரோம், நாடுகள், நம்மவரை அழைத்துப் பாராட்டியுள்ளன! ரோம்சாம்ராஜ்யாதிபதிகளின் நாணயங்களைக் கோவையிலும் மதுரையிலும் கண்டெடுத்திருக்கிறார்கள்! அண்மையில். தமிழர்கள் கடல் கடந்து வாணிபம் நடத்தினர். கடலைக் கடக்க அவர்கள் பலப்பல வகையான கப்பல்களைக் கண்டனர். அவைகளின் பெயர்களைக் கேளுங்கள்:

| | |
|---|---|
| புணை | கட்டுமரம் |
| பரிசில் | தோணி |
| தமில் | ஓடம் |
| படகு | அம்பி |
| வங்கம் | கப்பல் |

நாவாய்

சிறிய கப்பல் முதல் பெருங்கப்பல் வரை கட்டப்பட்டன! ஒவ்வொரு பெரிய கப்பலும், ‘மதில் சூழ்ந்த மாளிகை’போலக் காட்சி அளிக்குமாம்! சற்பனையல்ல. பழந்தமிழ்நூல் கூறுகிறது.

“பிணங்கு கதிர்க்கழனி
நாற்பண் எமுற்று
உணங்கு கலன்
ஆழியின் தோன்றும்
ஓர் எயில் மன்னன்”

என்று புறநானூறு செப்பும் வரிகளைப் பாருங்கள். நான்கு பக்கமும் நீர் நிரம்பிய கழனிகள்! நடுவிலே தனியாக விளங்கும் மதில்கள் வளைத்த கோட்டை!! — இதனை, விரிகடலின் நடுவில் தனியாகத் தோன்றும் கப்பலுக்கு’ ஒப்பிடுகிறார், புலவர். அவ்வளவு ஆராய்ச்சியும் திறனும் அமைந்தவராயிருந்தனர், தமிழ் மைந்தர்கள்! அவர்களது செல்வம் உலகெங்கும் மணம் பரப்பிற்று! உலகின் அரியபொருள்களும் தமிழ் மாதாவை அலங்கரித்தன!!!

மயில் தோகை,
அரிசி,
தந்தம்,
முத்துக்கள்,
நீலம்,
தேக்குமரம்
மிளகு,
பொன்,

முதலிய பொருள்களை, உலகுக்கு வழங்கினாள் தமிழன்னை! அவளது செல்வர்கள் திரைகடல் தாண்டி, வாணிபம் நடாத்தினர்! நாவாய் ஓட்டினர். ‘நல்லோர்’ எனப் புகழுரை பெற்று, சீர் பெற்றிருந்தனர். இந்த விபரங்களையெல்லாம் நமது நாகரிகக் கண்ணாடிகளாம், பழந்தமிழ் நூல்கள், எடுத்துக் கூறுகின்றன. இன்பம் அரசோச்சிய அந்த நாட்களைத் தமிழ் நூல்களில் காண்கிறோம்! உலகத்தோடு தொடர்பு கொண்டதோடு இருக்கவில்லை— தமிழக வீரர்கள். தம்மை எதிர்த்தோரையெல்லாம் மண்டியிடச் செய்திருக்கின்றனர். ‘பரதன்’ பெயரால் வழங்கும் ஆர்யாவர்த்தமெனும் பரதகண்டத்தை, பலமுறை அடக்கியிருக்கின்றனர்! அதனைச் சிலப்பதிகாரம் அழகாகச் செப்புகிறது:

“வடதிசைக் கங்கையும்
இமயமும் கொண்டு
தென்திசையாண்ட
தென்னவன் வாழி!”

என்று, அழகாக வெளியிடுகிறார், இளங்கோ. தோள்வலிமையும் வாள் வேகமும் கொண்டு வீரம் கொப்பளிக்க வெற்றிச் சிந்து பாடியிருக்கின்றனர். தமிழக வேந்தர்கள்! வடநாட்டின்மீது படையெடுத்துத் தமது அடிபணியச் செய்வதென்பது மூவேந்தருக்கும் ஒரு விளையாட்டாக இருந்திருக்கிறது! சேரச் சிங்கம் செங்குட்டுவன், பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தான் ஆகிய மூவேந்தரும், ஒவ்வோர் முறை, வடவரை வாட்டியிருக்கின்றனர். அவ்வளவு வீரம் விளையாடிற்று, இங்கு! வாணிபம்—உலக உறவு—வீரம் இவைகளோடு ஒடுங்கிடவில்லை. தமிழ் நிலத்தின் பெருமைகளைப் பார்க்குந்தோறும், உள்ளம் குமுறும். விரோதிகளை முறியடிப்பதோடு, வாணிபத்தை நடாத்துவதோடு, முடிந்துவிடவில்லை! அருமையான அரசு முறைகளை வகுத்திருந்தனர். அரசன் ஒருவனோடு ஆட்சிமுடிந்துவிடவில்லை. அவனுக்கு ஆலோசனை கூறும் ஐம்பெருங்குழு, எண்பேராயம், நமது இதயத்தைக் கவரும். மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற மாசனம் எனும் ஓர் சபையும் உண்டாம்! மக்களின் வழக்குகளைக் கவனிக்கும் அறங்கூறு அவையும் இருந்தது! மக்களின் நலன்களை ஓம்பி, அவர்களுக்கு வேண்டியனவைகளைச் செய்வதையே பழந் தமிழ் மன்னர் தமது கடமையாகக் கொண்டிருந்தனர். அன்பும் இன்பமும் கூத்தாடிற்று, தமிழ் நிலத்தில்! கல்வி வளர்ந்தது! கற்றோரைக் காமுறும் மன்னர்கள் இருந்தனர்! அவர்களால் தமிழன்னை பூரித்து இருந்தாள்! பொன்னும் மணியும் பூண்டு புளகாங்கிதம் அடைந்தாள்! கலைகள் பெருகின. இசையும் கூத்தும் எங்கும் நிறைந்தது! அவ்வளவும்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 19—10—52 [ஞாயிறு

# போரும் உலகமும்

★

“வெட்கப்படுகிறேன்! வேதனைப்படுகிறேன்!!” என்று பீகிங் மாநாட்டில், ஜோன் ஹிண்டன் எனும் அமெரிக்கப் பெண்மணி வேதனையோடு வெளியிட்டாராம். “இந்தக் கைகள் தான், நாகஸாகியை அழித்த அணுக்குண்டைச் செய்ய உதவின. ஜப்பானியரை அழிக்கக் காரணமாயிருந்தவர்களுள் நானும் ஒருத்தி. மனித இனத்துக்கு நான் செய்த மகத்தான துரோகத்தை நினைத்து வெட்கப்படுகிறேன்” என்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோர் கூடிய அங்கே கூறினாராம். அவர் ஒரு விஞ்ஞானி! அமெரிக்காவுக்கு அணுகுண்டு உற்பத்தியின் போது, மிகவும் பயன்பட்டவர்! அவர், தன்னுடைய வேதனையை, சமாதான மாநாட்டில், வெளியிட்டிருக்கிறார். இந்த நெஞ்சுருக்கும் செய்தியைக் கேள்வியுறும் நேரத்தில் மாண்டிபெலோ எனுமிடத்தில், புதிதாகத் தாம் கண்டுபிடித்த அணுகுண்டினை வெடிக்கச்செய்து பார்த்திருக்கிறார்கள், வெள்ளையர் என அறிகிறோம். முதன் முதலில் அணுகுண்டினை வெடிக்கச் செய்த விஞ்ஞானி, கண்ணீர் வடிக்கிறார்! ஆனால், பிரிட்டன் தனது வெற்றியைப் பற்றி விளக்கம் உரைத்துக் கொண்டிருக்கிறது!! அமெரிக்காவுக்கு மட்டுமே தெரியும்—இல்லை, ரஷ்யாவுக்கும் தெரியும், என்றிருந்த நிலைமை மாறி, பிரிட்டனும் அறிந்துகொண்டு விட்டது, என்கிற சூழ்நிலை உண்டாயிருப்பது, ஒரு விதத்தில் மகிழ்ச்சிக்குரிய செய்தியே. சிலருக்கு மட்டும், இதுபோன்ற ‘தீமை’கள் தெரிந்திருப்பது ஆபத்தானதுதான்! ஆகவே, முயற்சியில் வெற்றிபெற்ற பிரிட்டனை வாழ்த்துகிறோம்.

ஆனால், இந்த வெற்றிகளைக் கொண்டு, மூன்றாவது உலகப் போருக்கு, விரைந்து செல்லும் முயற்சியில் ஆதிபத்ய நாடுகள் ஈடுபடாமலிருக்க வேண்டும். தனது அணுசக்தி உண்மைகளை ரஷ்யருக்குச் சொல்லிவிட்டதாக, அமெரிக்க அரசாங்கம், ஒரு அமெரிக்க விஞ்ஞானிக்கு, மரண தண்டனை தந்திருக்கிறது, இந்த வாரம்! பரிதாபமான இச்செய்தியைக் கேள்வியுறும் சமயத்தில், பார்மோசாத் தீவில் வாழும் சியாங்கேய் ஷேக், மார்தட்டியிருக்கிறார்! ‘தனது வாழ்வின் இலட்சியம், சீனா முழுமையும் கைப்பற்றி புது ஆட்சியை ஏற்படுத்துவதே’ என்பதாக. அவர் கொண்டாடிய 41-வது தேசியக் குடியரசு விழாவுக்கு, அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் நல்வாழ்த்துக்களை, அனுப்பியிருக்கிறார். செஞ்சீனாவோ சமாதான மாநாடு கூட்டுகிறது! ரஷ்யத்தலைவர், ஸ்டாலினும், தமதுகட்சித் தோழர்களுக்குப் ‘புதுவிளக்கம்’ ஒன்றைத் தந்துள்ளார். அதன்படி அவர் கருதுவது, “உலகில் ரஷ்யாவுக்கும் — முதலாளித்துவ நாடுகளுக்குமிடையே போர் ஏற்படுவது சாத்யமல்ல. ஆனால், முதலாளித்துவ நாடுகள் ஒன்றையொன்று விரோதித்துக்கொண்டு தமக்குள்ளாகவே போரிட்டுக்கொள்ளும்” என்பதாகும். முதலாளித்துவம்—பொதுவுடைமை ஆகிய இரண்டும் மோதியே தீரும்! என்று கருதிவருவோருக்கு, ஸ்டாலின் தரும் புதுஉரை புதிராகவே தோன்றலாம்.

ஆனால், அவரது விளக்கத்திலிருந்து நமக்குக் கிடைப்பது, “உலகை அதிரவைக்கும் போர் ஏற்படாது” என்பதாகும். உலக வல்லரசுத் தலைவர்களில் ஒருவரது இந்நம்பிக்கை நமக்குத் தெம்புதரும் சமயத்தில், தேன்துளி தடவுவதுபோல சர்ச்சில் செப்புகிறார், “இன்னொரு போர் ஏற்படுமெனத் தான் நம்பவில்லை” என்பதாக. போரின் விளைவால் உலகம் படும் அவதியைக் காணும் நாம், இந்த இருவல்லரசுத் தலைவர்களும் ‘யூகமாக’க் கூறுவதை மனமகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அணுகுண்டு ஆராய்ச்சியும், மற்றோர் பக்கம் சியாங்கைத் தூண்டிவிடுவதும், கொரியச் சண்டையும் ஏன் நீடித்துக்கொண்டே போக வேண்டுமென்பது விளங்கவில்லை! உலக நிலைமைகள்தான் இவ்விதம் என்றால், காஷ்மீருக்காக உதயமான குமுறல், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அடங்கவில்லை. “பாகிஸ்தானின் பயமுறுத்தலுக்கு நாம் பயந்துவிடமாட்டோம். நம்மிடம் பலமான ராணுவம் உண்டு” என்கிறார் பண்டித நேரு. “பட்டாளத்தை அதிகமாக்குவதில் அகிம்சை வீரர் காந்தியாரின் ஆசியும் பெற்றே ஆரம்பித்தோம்” என்கிறார். அகிம்சை! போர் முழக்கம்!!—‘யுத்தம் ஏற்படாது’ எனும் அறிவிப்பு! போர் ஆயுதச் சேகரிப்பு!!

விசித்திரமாக யிருக்கிறது, உலகின் போக்கு.

வேதனையின்றி மக்கள் வாழ வேண்டுமானால், போர்க் குமுறல், அடங்கவேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்வு சிறக்கமுடியும். மார்தட்டும் வல்லரசுத் தலைவர்கள் எல்லாம் போரின் சீர்கேடுகளை அறிந்தவர்கள்தான்.

‘நாகாஸாகி’யை நிர்மூலமாக்கிய அமெரிக்கப் பெண்மணி, வேதனையோடு வெளியிடுகிறார், ‘வெட்கப்படுகிறேன்! வேதனைப்படுகிறேன்!” என்று. அதனைப் போர் முழக்கம் செய்யும் வல்லரசுத் தலைவர்கள் உணர்ந்தால்நல்லது. உலகம்வாழும்! போராசையும் ஒழியும்.

★

## ‘புஸ்வாணம்’

பஞ்சத்தைக் கூறிப் பணம்கோருவதற்காக, ஆச்சாரியாரும் அவரது சீடரும், டில்லிக்குச் சென்றுள்ளார்கள். பத்து கோடி ரூபாய் பெற்று வரலாம் என்பதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன.

இரும்பு நெஞ்சினரிடமிருந்து இத்தொகை கிடைப்பது குறித்து மகிழ்ச்சிதான். ஆனால், இதைக் கொண்டு சென்னையைச் சிங்காரச் சோலையாக்கிடமுடியுமா? பஞ்சத்தைப் போக்குவதாகப் பற்பல கிணறுகளைத் தோண்டலாம்—பல விதத் திட்டங்களைச் சொல்லலாம். ஆனால், நிரந்தரமான பயன் கிடைத்துவிட இயலுமா?

பத்து கோடி இருக்கும்வரை சரி! பிறகு? மீண்டும் உதவி கோரி, டில்லிக்குத்தானே ஓடவேண்டும்.

மூட நம்பிக்கையைக் குறிக்கும் ‘தீபாவளி’யின்போது, சிறுவர்கள் புஸ்வாணம் விடுவர். விர்ரென்று கிளம்பி, சிறிது நேரத்தில் இருந்த இடம் தெரியாமற் போய்விடும். அதைப் போன்றதுதான். இந்த உதவியும்.

நிரந்தரமான சுகவாழ்வு பெற வேண்டுமானால், டில்லி தர, நாம் வாங்கும் நிலைமை மாறவேண்டும். அன்றுதான் நமது நலன்களை நாமே கவனித்துக் கொள்ள முடியும்! நாட்டையும் சோலையாக்கமுடியும்.

★

6-ம் பக்க தொடர்ச்சி

வெள்ளம் அலைமோதுகிறது, உள்ளத்தில். கண்களில் நீர் வழிகிறது! கண்ணீர் வடிக்கிறோம். ஏக்கத்தோடு அழுகிறோம். வேதனையில் நெளியும் புழுப்போலச் சுருள்கிறோம்! “விழிகளில் இரக்கம் காட்டுங்கள் ஐயா! எங்கள் வேதனைகளைப் போக்குங்கள் பிரபு!!” என்று கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன நமது இதயம், எரிமலையாகிறது! வாழ வழியில்லை! செல்வத்தால் ‘வளர்ந்த; நிலம்: பிணங்களால் ‘வளர்கிறது’ இன்று!! பட்டினி–பஞ்சம்–வேலையில்லை—ஏழைக் கும்பல்—ஒரே ஏக்கக் குரல்! இவைகளைச் சுட்டிக் காட்டுவது, சிறுபிள்ளைத்தனமாம்! முட்டாள்தனமாம்!!

இலங்கைக் கரையிலே, நான்கு பிணங்கள்! — அதைக் காட்டி நாம் வடிக்கும் கண்ணீர், முட்டாள்தனமாம்.

புராதனப் புகழைக் கூறும் தமிழ் ஏடுகளைக்காக்க விரும்புவது—சிறுபிள்ளைத்தனமாம்.

வாழமுடியாது செத்துக்கொண்டிருக்கும் நான்கு கோடிமக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடுவது, “நான்சென்ஸாம்!”

திரைகடல் கடந்து, வாளும் தோளும் தந்த வெற்றிகளால் பூரித்துக்குலுங்கிய பெருமைகளைப்பெற்றோர், பிணங்களாகிக்கொண்டிருக்கும் வேதனையை எடுத்துச் சொல்வது, சிறுபிள்ளைத்தனமாம்.

செப்புகிறார்! ஏனோதானோவல்ல, எரிமலைகளைக் கண்டு ஏளனம் செய்பவர். உலகம் உணர்ந்தவர் என அழைக்கப்படுபவர்! ஆசிய கண்டத்தின் ஜோதியெனப் பட்டம் சூடப்பெற்றவர்! பரந்த பூமியின் பாதுகாவலராக அமர்த்தப்பட்டிருப்பவர்! பண்டித நேரு கூறுகிறார்! நாம் செய்வது, நான்சென்ஸாம்! ‘ஐயோ!’ என்றலறும், நம்மை, ஆங்கிலவார்த்தையை வீசி, ஏளனம் செய்கிறார்.

நம்மை நாம் காத்துக்கொள்ள விரும்புவது—‘நான்சென்ஸாம்!’

வாழ்வழிந்தும், தான்சிதையாது இருக்கும் தமிழ்மொழியினைக் கட்டிக்காக்க விரும்பும் நமது செயல் ‘நான்சென்ஸாம்!’

திருக்குறளைப் போற்றுவீர், சிலம்புச்செல்வம் காணுவீர், மணிமேகலை நோக்குவீர், பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் படிப்பீர்—என்று பழந்தமிழ் நூல்களைப் பேணுவது, ‘முட்டாள்தனமாம்!’

வளமிழக்காத தாய்மொழியை வதைக்கவரும் இந்தி ஏகாதிபத்யத்தை எதிர்ப்பது, முட்டாள்தனமாம். கூறுகிறார், அவர்! இந்தி ஏகாதிபத்தியத்தின் தலைவர், செப்புகிறார் இதனை!!

கடலோரத்திலே மிதக்கும் பிணங்களைக் கேலி செய்கிறார் — அவர் மிகப் பெரியவர்! உலகம் போற்றும் ஒரு நபர்!! — அவரது உதடுகள் சிந்தியுள்ளன, இந்தவார்த்தையை. மாபெரும் அரசியல் வாதியெனப் புகழப்பட்ட சர்ச்சில் துரையும், இதே வார்த்தையைத்தான் வீசினார், முன்பு. ஆனால், பிறகு, அவரே தவறை உணர்ந்து கரம் நீட்டவேண்டியவரானார்.

சர்ச்சில் தொனியிலேயே பேசியிருக்கிறார், பண்டிதர். பாபம், அதே பீடத்தில் அமர்ந்திருப்பதன் விளைவுபோலும்! நம்மைக் கேலி செய்கிறார்!! — நாம், கேலிக்குத் துவண்டவர்களல்ல; எனவே, அவரை மன்னித்துவிடலாம்—அவருக்காகப்பரிதாபப்படலாம். ஆனால் நமது மொழிப் போரினைக் கேலி செய்கிறார்! நமது விடுதலையுணர்ச்சியை எள்ளி நகையாடுகிறார்!!

ஜாருக்கும் ஹிட்லருக்கும் — இருந்த திமிர்வாதம், அலகாபாத் வீரரையும் பிடித்துக்கொண்டது, ஆதிபத்ய பீடத்தின் ‘ராசி’போலும்.

“நான்சென்ஸ்!”—என்பதுபோல பலவார்த்தைகள் உண்டு, ஆங்கில அகராதியில். அத்தனை வார்த்தைகளையும் தேடிப்பிடித்து, நம்மீது வீசட்டும். பரவாயில்லை! தூங்கும் புலியை, எழுப்பிவிடும் விளைவைத்தான் அவை உண்டாக்கிடுமே யொழிய அடக்கிவிடாது. திருவிடத்தார், நெஞ்சம் எரிந்துகொண்டிருக்கும் எரிமலை! இதை ‘நான்சென்ஸ்’ பதப்பிரயோகம் அடக்கிவிடாது.

அரசியல் புரட்சிகளை அறிந்தவர், பண்டித நேரு. பிரெஞ்சு மக்களின்கண்ணீரைகண்டு கேலிபேசிய லூயியின் கதி, தெரியும் அவருக்கு! ஆனாலும், கூறியிருக்கிறார் ‘நான்சென்ஸ்!’ என்று.

துடிக்கும் உள்ளங்களைக் கேலி செய்திருக்கிறார்! பழம் பெரும் பரம்பரையைநையாண்டி செய்திருக்கிறார்!! காஷ்மீரத்து புதல்வருக்கு, டில்லி பீடம், தந்துவிட்ட ஆதிபத்திய வேகத்துக்காகப் பரிதாபப் படுகிறோம். மாநிலம் ஆள்வதென்பது, ‘சந்து’ நடை பயில்வதால் முடிந்திடாது. பொறுப்பும், பெருமையும் வேண்டும், அவைகளை இழந்திருக்கிறார், மோதிலாலின் செல்வர்.

தேசத்துக்காக உழைத்த ஜவஹரை நாம் அறிவோம். அதே கண்கள் முன், தன்னுடைய ஆதிபத்ய ரூபத்தையும் காட்டுகிறார்! தியாகி பண்டித நேருவாகயிருந்தால், விடுதலை யுணர்ச்சியைக்கேலி செய்யும் துணிவு வந்திருக்காது. பனியாவின் தூதர் பேசக் கூடிய வார்த்தை! மார்வாடியின் மைந்தன் வீசக்கூடியச் சொல்! எதேச்சாதிகாரவெறியர் பேசக் கொடிய தொனி! ஆனால், ஒரு பிரதம மந்திரி பேசியிருக்கிறார்.

மொழி காக்க நாம் சிந்திய இரத்தம் அதிகம்! தாளமுத்து நடராசன் எனும் இரு வீரர்களின் கல்லறைகள், உண்டு. அவைகளைக் கேலி செய்கிறார்! கல்லறையிலே கேலி—சென்னையிலே சிந்திய சொல். நாம் தாங்கிய தடியடிகள், துப்பாக்கிக் குண்டுகள், அனைத்தும் ‘சிறுபிள்ளைத் தனமாம்.’

சொன்னவர், நம்முடனேயேயிருந்து, நமது பழம்புகழ் உணர்ந்தவர் அல்ல. வடநாட்டுப் புதல்வர்! வாடைகொடுமை அடித்தால்தென்றல் தேடிவரும் சுகப்புருஷர்போல இங்கு வருபவர். அவர், எள்ளிநகையாடுகிறார்! கனகவிசயன் கர்ஜிக்கிறான்!! சேரன்பரம்பரை முட்டாள் கூட்டமாம் — சோழன் சந்ததி சோற்றுத்துருத்திகள் எனும் எண்ணம்போலும். பாண்டியன் முரசம் இமயத்தைக் கலக்கிய காலம் ஒன்று இருந்தது! ஆனால், இன்று பிணங்கள் வீழும் இடம்தானே?—எனும் நெஞ்சுரம்போலும்.

நேரு வீசிய சுடுசொல், அவருடைய பொதுவாழ்வை, மிக மிகக் களங்கப்படுத்திவிட்டது.

அந்தச் சொல் — நம்மனோரின் உள்ளத்தில் தைத்து விட்டது. நாமும் அவரும் உள்ளளவும்மாறாது மறையாது.

தூங்கும் இனத்துக்கு, ஆவேச வெறியை, இவ்விதம்தான் தெரிந்தோ தெரியாமலோ, ஊட்டியிருக்கின்றனர் ஆதிபத்யவாதிகள்.

நேருவும், சிந்தியிருக்கிறார்! செந்தேள் கொட்டியதுபோலத் திராவிடர் இதயம் துடிப்பதை அறிகிறோம்.

மறையாத வடுவையும், தணியாத ஆத்திரத்தையும், விடுதலைப்படைக்குத் தந்து சென்றிருப்பதற்காக, நேருவுக்கு நமது நன்றி. சுடுசொல் நம்மை அழித்திடாது! சுடுசொற்களால் வளர்ந்தோர்தான் நாம்!!

★

# சேவலும் கழுகும்

"அருமையான ஆசனம் தருகிறேன்! ஆலவட்டம் சுற்ற பிரதானியர் உண்டு. அன்பனாகி விடு. பளிங்குபோன்ற மாளிகையில் உலாவலாம். பளபளப்பைப் பார்த்தாயா! ஜொலிக்கிறது!! இங்கே உனக்கும் ஆசனம் தருகிறோம். ஒரு வார்த்தை சொல். கொஞ்சம் தலையை ஆட்டு!!"

நிமிர்ந்து பார்த்தான், அந்த உழைப்பாளி! ஆசை வார்த்தைகளைக் கொட்டும் அவரது உருவத்தை ஒரு முறை உற்று நோக்கினான். தன்னையும் ஒருமுறை பார்த்துக்கொண்டான். கால்களையும் கைகளையும் பூட்டியிருக்கும் விலங்குகள் தெரிந்தன! திமிர் பிடித்தோர் தந்த சவுக்கடியால் கசிந்து போயிருந்த இரத்தத் துளிகள் அவன் கண்களில் பட்டன!! இடி முழக்கம் போல் கேட்டான்.

"ஆசனம் தர அழைக்கும் அன்பரே! நான் யாரென்பது, தெரியுமா?"

"தெரியும் அதனால்தான் அழைக்கிறேன். நீ, ஓர் உழைப்பாளி."

"உழைத்து உழைத்து உடலைக் கருக்கிக் கொள்ளும் ஏழை நான். எனது குடும்பம், சேவல் கூவுமுன் விழித்து கதிரோன் மறையும் வரை உழைத்தும் சுகம் காணாமல் தவிக்கிறது."

"சுகம் பெறத்தானே அழைக்கிறேன்—அரியாசனம் தருகிறேன்—என்கிறேன்......"

"அரியாசனம் தருகிறாயா?"

"ஆம் நிச்சயம்—அதோ பார்த்தாயா, உன்னைச் சேர்ந்த ஒருவனைக் கூட...."

"நீர், அமர்த்தியிருக்கிறீர்!—அப்படித் தானே?"

"சந்தேகமோ — இஷ்டமித்திரனாகி விட்டால் நீயும் பெறலாம்"

"அரியாசனம் தருவீர் — அது சரி! அந்த அரியாசனம் யாருடையது? நீர் தருவேன் 'என்கிறீரே, அந்த ஆசனம் யாருடையது அன்பரே!" ஆசை வார்த்தைகளைக் கொட்டியவர், திகைத்தார். உழைப்பாளி, இடிபோலக் கேட்டான். "சொல்லும்? அது யாருடையது. நீர், யார் அதை எனக்குத்தர?"— பதில் கூறாது, விழித்தார், பாசமொழி வீசிய ஆசாமி. உழைப்பாளி குமுறினான்! நீர் வழிந்து போயிருந்த அவன் கண்களில் கனல் பறந்தது!! "அன்பரே—உம்மைக்காண என் இதயத்தில் ஆயிரம் ஈட்டிகள் குத்துவது போலிருக்கிறது. அல்லும் பகலும் உழைத்தும், அதன் ஆனந்தம் அடையாதவன் நான். எனது உழைப்பிலே மலர்ந்தது இந்த நாடு! நானும் எனது மக்களும் சிந்திய வியர்வையிலே ஏற்பட்டவைதான் மாடமாளிகைகள்! பொன்னும் மணியும் எனது மூச்சின் பரிசுகள். உழைத்தேன் — வாழ்கிறாய் நீ! உன் வாழ்வின் வசதிகள் யாவும், நான் தந்தது. நீ அமர்த்தப் போவதாகச் சொன்னாயே, அந்த அரியாசனம் என்னுடைய பரம்பரையின் சொத்து. படை ஆட்சியை நடத்திய எம்மைப் பார்த்து பரிகசிக்குமளவு, உமக்குத் தைரியம் வந்ததை நினைத்து, கண் கலங்குகிறேன்! கோழையல்லநான்—என் விரல் நுனிக்கு விரண்டோடிய பட்டாளங்கள் அதிகம்! ஆனால் இன்று விலங்குகள் பூட்டப்பட்டு, குருதி கசிய, வீதியிலே நிற்கிறேன். காலிலே அறியாமை எனும் விலங்கு! கைகளிலே ஏழ்மை எனும் பூட்டு!!— இவைகளோடு, உயர் ஜாதிக்காரர்கள் தரும், சவுக்கடி என் உடம்பைப் பதம் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. அதனால் வழியும் குருதியைத் துடைக்க நீ வரவில்லை! உடம்பைப் பிணைத்திருக்கும் விலங்குகளை விலக்க நீ வரவில்லை!! அரியாசனம் தருகிறேன் என்கிறாய். நான் செய்த ஆசனம், அது! எனக்குச் சொந்தமானது! ஆனால், நான் நடைப்பிணமாய் நிற்கிறேன். நீ, ராஜாதி ராஜனாக வந்து, கேலி பேசுகிறாய், கேலி! உன்னைச் சொல்லுவதில் குற்றம் இல்லை. உனக்கு இவ்வளவு திமிர் வளரும்படி செய்துவிட்டனரே, எம்மவர் என்பதுதான் என்னைக் கொல்லுகிறது..."— உழைப்பாளியின் குரல் கரகரத்தது. ஆசைமொழி பேசியவர், விழித்தார்! "உன் தொல்லைகளைப் போக்கத்தானே, அரியணைக்கு அழைக்கிறேன்" இந்தப் பதில் கேட்டதும், உழைப்பாளியின் மூச்சு பலத்தது! பற்களைக் கடித்தான்!! "சூதுக்காரா! போ — போய்விடு. உன்னை அறியாதவன் என்றாய் நினைத்தாய். அரியாசனம் தரலாம், நீ. ஆனால் என் உடம்பில் மாட்டப்பட்டிருக்கும் விலங்குகள்! அவைகளை அகற்ற மாட்டாய். பூட்டியதே உனது பரம்பரைதானே? குருதிகசியும்திரேகத்தோடு, விலங்கிடப்பட்ட என் உடலைத் தூக்கிக்கொண்டுபோய், சிம்மாசனத்தில் அமர்த்துவாய். உன்நரிப் புத்தி அறிவேன் நான்! நயவஞ்சகத்தால், வாழ்விழந்த எங்களை வதைத்தது போதும். வளரும் எமது ஆவேசக்குரலை கல்லறைக்கு அழைக்கிறாய்!போ—போதும் உன்சூதுமதி"

*

கடலூருக்குச் சென்று 'காங்கிரஸ்' மாநாடொன்று ஏற்பாடு செய்து, புலிநிகர்மார்த்தரைப் பாகு மொழிகளால் மயக்கவெண்ணிய அன்பர் ஆச்சாரியாருக்கு, நண்பர் S. S. ராமசாமி அவர்கள் விடுத்திருக்கும் 13-ந்தேதிய அறிக்கையைக் காண்போர்க்கு மேற்கண்ட காட்சியே கண்முன் வரும். "சேலம் முதல் தென்னாற்காடுவரை தன்னை எதிர்க்கும் கோட்டையாக" இருப்பதாகக்கூறி, தனது ஆட்சிக்கு அவர்கள் ஒத்துழைக்கவேண்டுமெனக்கோரி, அன்பர் ஆச்சாரியார் விடுத்த வேண்டுகோளையும், அதற்குப் பிறகு ஏற்பட்ட நிலைமைகளையும் நாடு அறியும். உழைப்பாளர் கட்சியின் "உறுதி"யினைச் சந்தேகித்துப் பலர், பலவிதமான அபிப்பிராயங்களைப் பரவவிட்டனர். இந்தக்கைங்கரியத்தை, தேசிய இதழ்கள், வெகு சாமர்த்தியமாகச் செய்திருக்கின்றன. நஞ்சு தடவும் இச்செயல் நல்லோர் பலரது உள்ளத்தில் சலனத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கியது. அவைகளைத் தகர்த்து, உழைப்பாளர் கட்சியின் குரலை, ஒலித்திருக்கிறார், தலைவர் எஸ். எஸ். ராமசாமி. அவர், அக்: 13-ந்தேதியிட்டு விடுத்திருக்கும் அறிக்கை.

"5—10—52 அன்று கடலூரில் நடந்த தமிழ்நாடு உழைப்பாளி கட்சிக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஒட்டி நான் பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கைபற்றி தவறான அபிப்பிராயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. தமிழ்நாடு உழைப்பாளிகள் கட்சி, ஐ. மு. விலிருந்து பிரிவதென்றோ, ராஜாஜி மந்திரி சபையுடன் எவ்வகையிலும் ஒத்துழைப்பதென்றோ, எங்கள் கட்சிக்கூட்டத்தில் முடிவெடுக்கப்படவில்லையென்று நான் வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்."

"மேலும் எங்கள் கட்சியின் தீர்மானத்தைத் தவறாகப்புரிந்துகொண்டும், மக்களிடத்தில் எங்களைப்பற்றி தவறான எண்ணத்தை உண்டாக்கும் நோக்கத்துடனும் அவசரப்பட்டு பத்திரிகைகளில் இதுவரை வெளியாகியுள்ள அபிப்பிராயங்களைக்கண்டு நான் வருந்துகிறேன்."

தெளிவாகத் தமது நிலையை விளக்கி, இந்த அறிக்கையினை விடுத்திருக்கிறார், உழைப்பாளர் கட்சியின் தலைவர். உழைப்பாளர் கட்சி, உருவாகிய வகையையும், அதை நடத்திச் செல்வோர், எவர் என்பதைக் குறித்தும் தெளிவாகஉணர்ந்தோர், இவ்விதஅறிக்கையைத்தான் எதிர்பார்த்திருப்பர். எனினும், அரசியலில் இப்போது அடிக்கும் அதிவேகஅலையின்காரணமாக தப்பெண்ணங்கள் பரவ வசதி ஏற்படுகிறது. விஷயம், மிதமிஞ்சிப் போகுமுன் விளக்கமான அறிக்கை விடுத்த நண்பர் ராமசாமியையும் உழைப்பாளர் கட்சியினரையும் பாராட்டுகிறோம். சென்னை அரசியல், இன்று விசித்திரமான சிலந்திக்கூடாகயிருக்கிறது! ஆச்சாரியார் சிலந்தி உருவில் இருக்கிறார். அதன் வாய்படுவோர், அரசியல் அனாதைகளாகிவிடுவர், என்பதை அறியாதவர்களல்ல உழைப்பாளர் கட்சித் தோழர்கள். உழைப்பாளர்கட்சி!—என்கிற பெயரே, அது கொண்டிருக்கும் கொள்கையினை விளக்கும். உழைப்போருக்காகப் பாடுபடும் கட்சி, அது. அதற்கும், உண்டு கொழுப்போர் மடமாகிய காங்கிரசுக்கும் இடையில் ஒற்றுமையை உண்டுபண்ணுவதென்பது கேலிக்குரிய காட்சியாகத்தானே விளங்கும். பணமூட்டைக்கும் பாதசாரிக்குமிடையே சம்பந்தம் ஏற்படுத்த முடியுமா? 'கழுகும் சேவலும் நண்பர்களாகவேண்டும்' என்பது, கேலிக்கூத்துத்தானே! உழைப்பாளர்கட்சி, உழைத்தும் வாழமுடியாது தவிக்கும் ஆயிரமாயிரம் ஏழைகளின் பிரதிநிதித்வம் பெற்றதாகும். அதனை ஆதரித்து நிற்கும் மக்கள், சமுதாயத்தில் மிகமிகப் பின்தங்கியவர்களாகும். "ஒருகாலத்திலே படையாண்ட பரம்பரை! இன்று கேவலம் சோற்றுக்கும் அலைவதேன்?" என்கிற, குமுறலிலே, முளைத்ததுதான் உழைப்பாளர் கட்சி. அதைச் சார்ந்திருக்கும் வாலிபர்கள், சமுதாயத் துறையிலே புதுமலர்ச்சி காண விரும்புவர்கள்! பொருளாதாரத் துறையிலே சமதர்மம் தழைக்கவேண்டுமெனும் ஆர்வம் கொண்டவர்கள்! அத்தகையோருக்கும் 'ஆச்சாரியாருக்கும்' முடிச்சுப்போட முயல்வோரின்! பேதைமதியே, மதி வாழ்ந்து வீழ்ந்துபோன ஒரு பரம்பரையின் வாழ்வில் வெள்ளி முளைக்கும்போது—"கூடாது! கூடாது! இருட்டே நல்லது. வா!" என்று எவரேனும் அழைத்தால், அழைப்பவரையும் அதை நம்பிச் செய்திகள் பிரசுரிப்போரையும் என்னவென்று அழைப்பது? ஏழைகளின் வாழ்வை நிமிர்க்கப் பிறந்தது, உழைப்பாளர் கட்சி! அதன் வெற்றிக் கறிகுறியாகத்தான் சேவலும் கூவிற்று! சேவலை, கழுகு கொத்திச் செல்லவா ஒப்புவர்! கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கும் மரபு அல்லவே, வீரத்தமிழருடையது—நண்பர் S. S. R. தெளிவுரை தந்து திகைப்பைப் போக்கினது கண்டு மகிழ்கிறோம். அரசியல் சூதாடிகளின் வலையில் S. S. R. விழமாட்டார் என்று உறுதியாக நம்புகிறோம். அரசியல் வட்டாரங்களிலே ஆச்சாரியாரின் தூபம் உண்டாக்கி வைத்த சந்தேகத்தை S. S. R. தம் அறிக்கைமூலம் விளக்கியது போலவே, உழைப்பாளர் கட்சி மாநாடு ஒன்று கூட்டி ஆச்சாரியாரின் சூழ்ச்சி முறையை அம்பலப் படுத்திவிடவேண்டுகிறோம். இப்போது போலவே இறுதிவரை கலங்காது நின்று பணிபுரியும் ஆற்றல் உள்ளவர் S. S. R. இதை நாம் அறிவோம். நாடு அறியும் வண்ணம் S. S. R. அவர்கள் நடந்துகொள்ள வேண்டுகிறோம்.

❀

## பிறப்பு

கவியரசர் பாரதிதாசன் அவர்களின் இரண்டாம் மகள் திரு. வேனில்—தண்டபாணி, 2–10–52 இரவு பெண் மகவொன்றைப் பெற்றெடுத்தார். 'தமிழ்ச் செல்வம்' எனக் குழந்தைக்குப் பெயரிடப் பட்டுள்ளது.

# "இருக்கிறார்கள், பண்டிட்ஜீ!"

பாரதத்தின் புனர் நிர்மாணம் குறித்து, சென்னைக் கல்லூரி மாணவர்களிடையில், வலியுறுத்திப் பேசியிருக்கிறார் பண்டித நேரு.

அகில இந்திய மனப்பான்மை வளரவேண்டுமென்று, புதுயுகக் காளைகளைப் பன்னிப் பன்னிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தக் கோரிக்கையை, பண்டித நேருவின் வாய் மூலம் மாணவர்களுக்கு வலியுறுத்தும் ஆசைதான் போலும், மேற்படி கூட்டம் நடைபெற்றதற்கும்.

'இந்தியர்', 'இந்தியா' — இந்த வார்த்தைகளை வலியுறுத்திப் பேசிய பண்டிதர் அவர்கள் சில முக்கிய விஷயங்களையும் தொட்டிருக்கிறார். அவை சனாதனிகளுக்கும், 'சாஸ்திரோக்தமான பாணியில் தர்மம் தழைக்கப் பாடுபடுவோருக்கும்', நாராசம் போலிருந்திருக்கும். எனினும் நேருவின் வார்த்தைகளையெதிர்த்து, எந்த மடாதிபதியும் சங்கராச்சாரியும் அறிக்கைவிடவில்லை! 'காசு' தந்து பத்திரிகைகளில் விளம்பரமும் செய்யவில்லை!! பண்டிதர் பகர்ந்த வார்த்தைகளில் குறிப்பிடக் கூடியது, "பழைமை மோகம் அகலவேண்டும்—புதுமையை ஏற்க வேண்டும்" என்பதாகும்.

மாணவ மணிகளுக்கு இந்த அறிவுரையைப் புகன்றிருக்கிறார்—உதாரணங்களோடு—"உலகம் முன்னேறிக் கொண்டே போகிறது. ஆனால் நாம் மட்டும் பழைமையை நினைத்துக் கொண்டேயிருக்கிறோம். ஒரு சிறிதும் மாறவில்லை" என்று வேதனையோடு வெளியிட்டிருக்கிறார். விளக்கத்துக்காக — நாம் அடிக்கடி கூட்டங்களில் கூறுவோமே, அதுபோல—ஆகாய விமானத்தையும் ராடாரையும் உதாரணப் படுத்திப் பேசியிருக்கிறார்.

மகிழ்கிறோம், இதனைக் கண்டு! மாணவர்களிடையில், 'கள்ளிச் செடி'களைப் பற்றிப் பேசிவிட்டுப் போகாமல் 'ரோஜா'வின் மணத்தையும் வலியுறுத்தினார், என்பதால்.

பழைமை மோகம் வேண்டாம்!—இதுபோல நாம் கூறினால், சீறுவர். 'மக்களைக் கெடுக்கும் மாபாவிகள் மாணவர்களையும் குட்டிச் சுவராக்குகிறீர்கள்'—என்று பாய்வர். நாமும் மாணவத் தோழரும் தொடர்பு கொள்வதே சட்ட விரோதம் என்பர். எவராவது ஒரு ஆசிரியர் பேசிவிட்டால், நடவடிக்கை' யெடுப்பர். ஆனால், இப்போது இந்தியப் பிரதமர், மாணவ உலகை, புது வாழ்வுக்கு அழைத்திருக்கிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

# திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் ★ புது நிர்வாகிகள் ★

### கோவை மாவட்டம்

**கொளாநல்லி**

செய: கு. சி. ராமசாமி, துணை: டி. கே. சுந்தரம், பொருள்: கோ. மா. கொடையரசு, மாவட்டப்: எ. ஆர். திருமலைசாமி. செயற்குழு 14-பேர்.

**கொழுமங்குளி**

செய: பழ. குப்புசாமி, துணை: அருணாசலம் மற்ற விவரம் இல்லை.

**சுல்லான்பேட்டை**

செய: கோவிந்தசாமி, துணை: எஸ். கே. சீனிவாசன், பொள்: எஸ். கே. வெங்கடபதி, மாவட்டப் எஸ். கே. சீனிவாசன், எஸ். கே. செகநாதன் செயற்குழு: 12-பேர்.

**உடுமலைப்பேட்டை**

செய- பெ. காளியப்பன், துணை: தா. ரா. கன்னியப்பன், பொருள்: இரத்தினம், மாவட்டப்: ரா. தங்கவேலு, மு. கருப்புசாமி. செயற்குழு: 7-பேர்.

**சல்லிபட்டி**

செய: நா. வெங்கிடுசாமி, துணை: ர. ராமசாமி, பொருள்: ர. சீனிவாசன், மாவட்டப்; சீ. ராமநாதன். செயற்குழு: 18 பேர்.

**தாலிகட்டிப்பாளையம்**

செய: சி. நடராசன், துணை: ப. முருகேசன், பொருள்: சி. செல்லப்பன், மாவட்டப்: சா. கைத்தமலை. செயற்குழு 7-பேர்.

**சிவகிரி**

செய: எஸ். எஸ். சுப்பையன், துணை: எஸ்- ஆர். பொன்னுசாமி, பொருள்: எஸ். எம். சக்கரபாணி, மாவட்டப்: எஸ். எஸ். சுப்பையன், செயற்குழு: 11-பேர்.

**சத்தியமங்கலம்**

செய: கே. சிவக்கொழுந்து, துணை: எஸ். எச். அமீர், பொருள்: எஸ். எஸ். குப்புசாமி, மாவட்டப்: கே. சிவக்கொழுந்து. செயற்குழு 10 பேர்.

**கொல்லைக்கோம்பை**

செய: பி. எ- ஜார்ஜ், துணை: சி. இல. சுந்தரேஸ்வரன், பொருள்: கொ. இராசன், மாவட்டப்: சுந்தரேஸ்வரன். செயற்குழு 11 பேர்.

**திருப்பூர்**

செய: பால்ராஜ், துணை: எல்-எம்-எஸ். நாதன், பொருள்: பி- என். பாலசுப்பிரமணியன், மாவட்டப் நவநீதன்' டி. நடராஜ், பி. ராமசாமி செயற்டிழு: 13-பேர்.

**காளிங்கராயன்புதூர்**

செய: எ. கே. சுந்தரம், துணை: கே. பி. துரைசாமி, பொருள்: கா. பழனியப்பன், மாவட்டப்: கே. ராமசாமி. செயற்குழு 9-பேர்.

**கவுந்தப்பாடி**

செய: ஆர். துரை, துணை. கே. எம். சென்னயன், பொருள்: கே. சண்முகம், மாவட்டப்: எஸ். எம். சுப்பிரமணியம் செயற்குழு 7-பேர்.

### மதுரை மாவட்டம்

**பழைய ஆயக்குடி**

செய: ப. சண்முகம், துணை: ஏ. கே. வீரமுத்து, பொருள்: சி. அன்புப்பழம், மாவட்டப்: மா. தங்கப்பன், செயற்குழு விவரம் இல்லை.

**சில்லமரத்திலைபட்டி**

செய: எஸ். பி. தியாகன், துணை: டி. ரத்தினமுத்து, பொருள்: கா. நடேசன், மாவட்டப்: திராவிட நேசன்.

**க. புதுப்பட்டி**

செய: ஆர்-கே-கே-சாமி, துணை: கே. எஸ். ராமசாமி, பொருள்: பி. முத்துக்கிளி, மாவட்டப்: கே-எஸ். ராமசாமி, செயற்குழு 15 பேர்.

**கம்பம்**

செய: கே. பி. திருவேங்கடம், துணை: வி. ராமசாமி, பொருள்: டி. நடராசன், மாவட்டப்; எம். சிக்கந்தர், செயற்குழு 17 பேர்.

**திருவாதவூர்**

செய: பா. க. கருப்பண்ணன், துணை: வ. வெள்ளக்குட்டி, பொரு: ஆ. பொன்னையா, மாவட்டப்: சு. தொ. ஆறுமுகம், செயற்குழு 9 பேர்.

**ஆண்டிப்பட்டி**

செய: திலமலை பாண்டியன், துணை கு. சுப்ரமணியன், பொருள்: ச. பழனிச்சாமி, மாவட்டப்: எம்.எஸ். பால்ராஜ்; செயற்குழு 13 பேர்.

**கொண்டயம்பட்டி**

செய: ந. பெ. பெ. பழனிச்சாமி, துணை: அ. ராமலிங்கம், பொருள்: கே. கே. ராஜாங்கம், மாவட்டப்: சு. பெ. ரா. மலைச்சாமி, செயற்குழு 17 பேர்.

**தாமரைக்குளம்**

செய: வெ-திருநாவுக்கரசு, துணை: செ. கந்தசாமி, பொருள்: வீ. கந்தசாமி, மாவட்டப்: வீ. சந்தையா, செயற்குழு 21 பேர்.

**தேனி**

செய: கே. காதர்மைதீன், துணை: கு. ராஜா, பொருள்: நாராயணசாமி, மாவட்டப்: அ. தேவராசன், செயற்குழு 9 பேர்.

**பூசாரி கவுண்டன்பட்டி**

செய: எம். ராமராஜ், துணை: எஸ். சீனிச்சாமி, பொருள்: எம். எஸ். ராமா, மாவட்டப்: என்-எஸ்-ராமர்.

### ராமநாதபுரம் மாவட்டம்

**தளவாய்புரம்**

செய: அ. வன்னியப்பெருமாள், துணை: மா. வி. மாரிமுத்து, பொருள்: சோ. ஆதிநாராயணன், மாவட்டப்: கு.மு. ராமசாமி, செயற்குழு 8 பேர்.

**முத்துச்சாமிபுரம்**

செய: எஸ். பொன்னுச்சாமி, துணை: எஸ். பாலவடிச்சாமி, பொருள்: பெ. சுப்ரமணியம், மாவட்டப்: எஸ். பொன்னுச்சாமி, செயற்குழு 11 பேர்.

**பூக்குளம்**

செய: சக்கரை, துணை: சிவத்தையா, பொருள்: இருளப்பன், மாவட்டப்: கரிகாலன். செயற்குழு: 14 பேர்.

**தனுஷ்கோடி**

செய: ஈ. மாசிலாமணி, துணை: எம். எஸ். மொகமத் மொகிதீன், பொருள்: ஆர். அப்துல்கரீம், மாவட்டப்: டி. ராமநாதன். செயற்குழு: 11 பேர்.

**கருத்தன்பட்டி**

செய: குப. கருப்பையா, துணை: தி. சேதுபதி, பொருள்: சுப. நடராசன், மாவட்டப்: து. சண்முகம். செயற்குழு: 13 பேர்.

### சேலம் மாவட்டம்

**வெள்ளார்**

செய: ப. கோவிந்தராசு, துணை: ஓ. கோவிந்தன், பொருள்: ர. கிருஷ்ணன், மாவட்டப்: கு. வெங்கடேசன். செயற்குழு: 12 பேர்.

**பெரியாம்பட்டி**

செய: பூ. ப. அண்ணாமலை, துணை: எஸ். சி. வெங்கடேசன், பொருள்: இரா. கருணாநிதி, மாவட்டப் பி. எம். குப்புசாமி. செயற்குழு: 7 பேர்

**மேச்சேரியானூர்**

செய: எம். எஸ். ராமநாதன், துணை: எம். ஈ. வெள்ளை, பொருள்: எம். ஆர். கந்தசாமி, மாவட்டட்: எம். எஸ். ராமநாதன். செயற்குழு: 17 பேர்.

**பாண்டமங்கலம்**

செய: இரா. ரங்கசாமி, துணை: வை. பெருமாள், பொருள்: வீ. க. முத்து. மாவட்டப்: எஸ். அப்பாவு, மு. சுப்ரமணியம். செயற்குழு 15 பேர்.

**சிங்கிபுரம்**

செய: ஆர். ரங்கசாமி, துணை: ஆ. சேரலாதன், பொருள்: எஸ். கே. பழனிமுத்து, மாவட்டப்: எஸ். பி. கந்தசாமி. செயற்குழு: 7 பேர்.

**கல்லாநத்தம்**

செய: கே.ஜே.கதிர்வேல், துணை: கே. எ. ராமசாமி, பொருள்: கே. எஸ். கோவிந்தன், மாவட்டப்: கே. சி. அய்யாக்கண்ணு. செயற்குழு: 7 பேர்.

### தஞ்சை மாவட்டம்

**மணக்கால்—அய்யம்பேட்டை**

செய: கா. சக்கரபாணி, துணை: பெரி. ராமமூர்த்தி, பொருள்: சு. சிவானந்தம், மாவட்டப்: கா. சக்கரபாணி, செய்ற்குழு: 11 பேர்.

**கதிராமங்கலம்**

செய: ஆர். அன்புமணி, துணை: என். எஸ். கோவிந்தராசு, பொருள்: எம். கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப்: ஆர். அன்புமணி. செயற்குழு: 8 பேர்.

**புதுக்குடி**

செய: க. வேம்பையன், துணை: தி. சு. சோமசுந்தரம், பொருள்: அய்யிலு, மாவட்டப்: மா. மீனாட்சிசுந்தரன். செயற்குழு: 7 பேர்.

**செந்தலை**

செய: சா. ரங்கராசன், துணை: துரைராசன், பெருமாள்: பொருள்: மா. குமாரசாமி, மாவட்டப்: கோ. மாரிமுத்து, செயற்குகு 12 பேர்.

**வடுவூர**

செய: பெ. முருகய்யன், துணை: கி. சிவானந்தம், பொரு: வீ. கலியபெருமாள், மாவட்டப்: முருகய்யன், செயற்குழு 15 பேர்.

**ஆயக்காரன்புலம் 2 சேத்தி**

செய: கு. பா. பாலசுப்ரமணியன், துணை: எஸ். கே. சண்முகசுந்தரம், பொரு: வீ. சுப்ரமணியன், மாவட்டப்: வை. சிவானந்தம், ந. முருகானந்தம், செயற்குழு 11 பேர்.

**வட்டாக்குடி**

செய: கே. மகமத் அலி, துணை: ஆர். பாலசுப்ரமணியன், பொருள்: ந. வேலு, மாவட்டப்: பி. வி கணேசன், செயற்குழு 16 பேர்.

**மரங்குடி**

செய: டி. எஸ். நாதன், துணை: வி. செயராமன், பொரு: டி. பாலசுப்ரமணியன், மாவட்டப்: இரா. கோபால்சாமி, செயற்குழு 8 பேர்.

**ஒரத்தநாடு**

செய: எம். சிங்காரவேலன், துணை: கே. வேலு, பொருள்: வி. அப்துல் காதர் மாவட்டப் எஸ். விஸ்வலிங்கம், செயற்குழு 6 பேர்,

★

### திருத்தம்

குன்னத்தூர் (கோவை) கழகத் தேர்தல் செய்தியில் துணைச் செயலாளர் K. G. ராமசாமி என்று சேர்த்துக்கொள்ளவும்.

*

12—10—52ல் வெளிவந்த தேர்தல் செய்தியில் சிங்கிபுரம்(கோவை) என்பது சிங்கிபுரம் (சேலம்) என்றிருக்கவேண்டும். சொற்குழு 7 பேர். என்பது 11 பேர் என்றிருக்கவேண்டும்.

### நடக்க இருப்பவை

ராயப்பேட்டை: (சென்னை) தி. மு. க. (37 வது வட்டம்) ஆண்டு விழா, புதுப்பேட்டை மைதானத்தில் 19—10—52 மாலை மு. கலையழகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள்: மு. கருணாநிதி, கண்ணதாசன், என். வி. நடராசன், இளவரசு பேசுவர்.

தாம்பரம்: துரைசாமி ரெட்டியார் கடைவீதியில் 19–10–52ல் திருக்குறள் மாநாடு நடைபெறும். தோழர்கள் திருக்குறள் முனுசாமி, கா. அப்பாதுரை, க. அன்பழகன், ப. ஜீவானந்தம், மணலிகந்தசாமி, எம். கன்னியப்பன் கலந்து கொள்வர்.

★

## தேனிக் கலவர வழக்கு

### மீண்டும் ஒத்திவைப்பு

மதுரை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டின் பெரியகுளம் முகாமில் 3—10—52ல் இவ்வழக்கு நடைபெற்றது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் தவிர, மதுரை ஜில்லா போர்டுத் தலைவர் என். ஆர். தியாகராஜன். கே. சக்திவடிவேல் கவுண்டர் எம், பி. உட்பட எல்லா எதிரிகளும் கோர்ட்டில் ஆஜராகி இருந்தனர். ஆஜர் ஆகாத தேனி இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி எஸ். எஸ். பால்ராஜ், நாகலாதபுரம் லட்சுமண நாய்க்கர் ஆகிய இரண்டு பேருக்கும் அரஸ்டு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. 5—9—52 வாய்தாவில் ஆஜராகாத எதிரிகள் தேனி நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஜெய்ஹிந்த் வி. ஏ. ராமசாமி ராஜா, பழனி செட்டி, பாண்டியன் ஆகிய இருவருக்கும் மேற்படி தேதியில் ஆஜராகாத குற்றத்திற்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது. வழக்கு 18–10–52க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

★

### மஜீது கொலை வழக்கு

11—10—52 அன்று நடைபெற்றது. நமது சார்பில் வழக்கறிஞர் பார்த்தசாரதி (நாயுடு) ஆஜராகியிருந்தார். எதிரி கண்ணன் வந்திருந்தார். 'வக்கீல் வைத்துக் கொள்ளப் போகிறாயா?' என்று, எதிரியை நீதிபதி கேட்டார். 'ஆம்' என்றார், எதிரி. அடுத்த வாய்தாவுக்குள் ஏற்பாடு செய்துகொள்ளவேண்டுமென்று தெரிவித்து வழக்கை 16—10—52க்கு நீதிபதி ஒத்தி வைத்தாரென நெல்லிகுப்பம் தி. மு. கழகத்தார் அறிவிக்கிறார்கள்.

★

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டிதர், இவ்வித விளக்கமும் அழைப்பும் விடுத்த அதே வாரத்தில், நமது மாநில மடமந்திரி வேங்கிடசாமி, மாணவர்களுக்கு மற்றோர் அழைப்பு விடுத்துள்ளார் — சென்னைக் கல்விச்சாலையொன்றில் பேசும்போது.

விஞ்ஞான விளைவுகளைப்போற்றுங்கள்! அஞ்ஞானத்தைப் போக்குங்கள்!! — இது, பண்டிதரின் அழைப்பு.

வேங்கடசாமியாரின் வேண்டுகோள்:- அஞ்ஞானத்தைப் போக்குங்கள்! மெய்ஞ்ஞானத்தைத் தேடுங்கள்!! என்பதாகும்.

பண்டிதர் சிறுவயதுமுதல், அரசியல் வாழ்விலீடுபட்டு நாட்டுக்காக பணி பல புரிந்தவர். மக்களின்கேடுபாடுகள், மாணவர்களைக் கண்டாம்; இதயத்தைத்தாண்டி வந்து கொட்டியிருக்கிறது, அவருக்கு. அதனால், விஞ்ஞானப் புதுமைக்கு அழைத்தார்!

ஆனால், அனுதினமும் 'வெள்ளைக்காரன்' அனுப்பும் வித விதமான மருந்துகளையும், ஊசி வகைகளையும் விற்று, பணத்தை நிலமாகவும் மாளிகையாகவும் மாற்றும் 'பிரபல கம்பெனிக்காரரான' வேங்கடசாமியார் அழைப்பு அனுப்புகிறார் மெய்ஞ்ஞானப் பாதைக்கு!!

காலேஜ படிப்பு போதாதாம் — மாணவர்களுக்கு. கடவுள் விஷயங்களைப் படிக்கவேண்டுமாம்.

மாணவர்களை ஞானப் பாதைக்கு அழைத்த பண்டித நேருவையும், மெய்ஞ்ஞானப் பாதையைப் பெற அழைக்கும் வேங்கிடசாமியாரையும் உற்றுநோக்க வேண்டுகிறோம்.

பண்டிதர் காங்கிரஸ் தலைவர்! வேங்கிடசாமியார், காங்கிரசில் இருப்பவர்!! பண்டிதர், உலக நிலைமைகளை அறிந்த ஆர்வத்தால்,மாணவர்களை விஞ்ஞானப் புதுமைகளில் நாட்டம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தினர். ஆனால், விஞ்ஞானத்தின்மூலம் உற்பத்தியாகும் 'மருந்துகளை' தருவித்து விற்கும் வேங்கடசாமியாரோ, மெய்ஞ்ஞானப் பாதைக்கு அழைக்கிறார்!

வேங்கடசாமியார், 'விஞ்ஞானத்தை, அனுதினம், பெட்டியில் குவியும் வருவாய்மூலம், காண்பவர். அவரதுபோதனை, இது!

பண்டிதர், நல்வாழ்வு ஆசையால், புதுமைக்கு அழைத்தாரே தவிர, அவர் வியாபாரியுமல்ல; விஞ்ஞானத்தைக் காசாக்கிக் கொண்டிருப்பவருமல்ல. ஆனால், அவரது போதனை வேறு!! லாபம்பெறுபவர், கண்டிருக்கிறார், எதுவும் அற்றவர், அன்பழைப்பு விடுக்கிறார். என்ன காரணம் இதற்கு? "சீச்சீ! தொடாதே அதை" என்று கூறிவிட்டு, பழத்தை ஆசையோடு பார்த்தவன் சென்றதும், தான்பறித்துவிற்கும் மனிதரை என்னவென்று சொல்வீர்கள்! அந்தரகம்தானு, இவ்விதம், லாபம் பெற்றுக்கொண்டே நடிப்பவர்களும்? அவர்களை, அறிமுகப்படுத்தியிருக்கவேண்டும் பண்டிதருக்கு.

"நீங்கள் புதுமைக்கு அழைக்கிறீர்! இவர்கள் பழைமைக்கு அழைக்கிறார்களே ஐயா?" என்று கேட்டிருக்கவேண்டும். அதோடு, 'அழைக்கிறார்களேயொழிய புதுமையால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்' என்பதையும் விளக்கியிருக்கவேண்டும். இதை அறிந்திருந்தால், நிச்சயம் நேரு வேதனைப்பட்டிருப்பார் — வெளிக்குச் சொல்லாவிட்டாலும் உள்ளுக்குள் வேதனைப்பட்டுக்கொள்வார். "எவ்வளவு பித்தலாட்டக்காரர்களை வைத்திருக்கிறோம்! இவர்களை நம்பியும் நாம் அலைகிறோமே. நவபாரதம் காணத்துடிக்கிறோம், நாம். ஆனால் இவர்கள் 'மகாபாரத'காலத்துக்கு அழைக்கின்றனரே. என்ன கோலம் இது! அதுவும், விஞ்ஞானத்தின் விளைவைப் பெட்டியில் போட்டுக்கொண்டே, இவ்விதம் போதிக்கிறார்களே. என்னே சூதுமதி! நாட்டின் முன்னேற்றநிலையில் அக்கரையில்லாத சுயநலம்"— என்று, நிச்சயம் நினைப்பார்; சொல்லமாட்டார்! சொல்லக்கூடியவராகயிருந்தால், அங்கேயா இருப்பார், இதனையெல்லாம் சகித்துக்கொண்டு!!

★

### மறைவு

மாயவரம் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினரும், செயல் வீரருமான தோழர் A. சாமிநாதன், அவர்கள் சென்ற 30—9—52 செவ்வாய் பகல் 3-மணிக்கு இயற்கை யடைந்தார்.

★

# வடிகட்டும் முறை

பிரிட்டிஷ் ஆட்சியினர், இந்தியாவை ஆட்சி புரிந்த காலத்தில், அதிகம் பேர் படித்துவிடக்கூடாது என்று பலவித இடையூறுகளை ஏற்படுத்தி வைத்திருந்தனர். அப்படித் தடைகளை மீறிப் படித்து வெளி வந்தாலும்கூட, அவர்கள் தங்களது விசுவாசிகளாயும், அடிமை மோகம் கொண்டவர்களாயும் இருக்கும் தகுதியில் கல்வி முறையையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இதனால்தான் நம் நாட்டில் படித்தவர்களில் சுய சிந்தனையாளர் அதிகம்பேர் உண்டாகாமல் போனதற்குக் காரணமாகும்.

பிரிட்டிஷார் உண்டாக்கிவைத்த இடையூறுகளில், பரீட்சைக்கு மாணவர்களை வடிகட்டும் முறையும் ஒன்றும். இந்த முறையால் நாட்டுக்கு நன்மையில்லை என்று பல காலமாகச் சொல்லப்பட்டு வந்ததையும் நேயர்கள் அறியக்கூடும். இக்குறைபாட்டை சுதந்திரம் கிடைத்த பிறகு, ஏற்பட்ட மந்திரி சபையினர் சென்ற சில ஆண்டுகளாய்ப் போக்கியிருந்தனர். இதனால் நாட்டு மக்களுக்கோ, அன்று படிப்பு முறைக்கோ ஒருவிதக் கேடும் வந்ததாகவும் தெரியவில்லை. இவ்வித நிலையில், தற்போது அதிகாரத்துக்கு வந்துள்ள இராசகோபாலாச்சாரி மந்திரி சபை, பழைய மந்திரி சபை உத்தரவை எடுத்துவிட உத்தரவிட்டிருக்கிறது. இப்புது உத்தரவு 1953-ம் ஆண்டுப் பரீட்சைக்கு அமலாக்கப்படும் என்று தெரிகிறது.

இப்புது உத்தரவின்மூலம், இனி 10-ம் வகுப்பு மாணவர்கள், அரசாங்கப் பரீட்சைக்குப் போகுமுன்பு, பள்ளிக்கூடத்தில் ஒரு முறை வடிகட்டப்படுவார்கள். அதாவது பள்ளிக்கூடப் பரீட்சையில் தேறியவர்கள்மட்டுமே அரசாங்கப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். இதன்காரணமாக, 4-வது பாரத்திலிருந்து 5-ஆம் பாரத்துக்கும், 5-ஆம்பாரத்திலிருந்து 6-ஆம் பாரத்துக்குப் போகும் போதும் பரீட்சை முறைகளில் சரியானபடி வடிகட்டப்படுவார்கள் என்று தெரிகிறது. இப்படியாக 4-வது பாரத்தில் தொடங்கும் வடிகட்டும்முறை 6-ஆம் பாரம்வரை நீடிக்கப்படும். ஆனாலும், இந்த வடிகட்டும்முறை —பரீட்சைவைத்துத் தேர்ந்தெடுப்பது கடினமாக இருக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலம் ஏற்படும் பலாபலன்கள் என்ன? பல ஏழை மாணவர்கள் மேல்வகுப்புக்குப் போகாதபடி தடுக்கப்பட, இதனால் வழி ஏற்படுகிறது. எப்படியென்ற ஒரு கேள்வி எழலாம். ஏழை மாணவர்களது பெற்றோர்களது சூழ்நிலையையும், அவர்களது கல்வியின்மையையும் உற்று நோக்கும்போது, ஏழை மாணவர்களில் மிகுதியானோர், சரியான சுற்றுச் சார்பில் வளரமுடியாத நிலையில் இருக்கும்போது, சிலர் படிப்புத் துறையில் மந்தமாய் இருக்கக்கூடும். அந்த மந்தத்திற்குரிய காரணங்களை அறிந்து, அதனை மாற்றும் சிறப்பு முயற்சிகளைச் செய்தாலன்றி, படிப்புத் துறையில் மாணவர்கள்பால் இருக்கும் மந்த நிலைமையைப் போக்க முடியாது. மேலும் பரீட்சையில் வாங்கும் 'மார்க்கு' ஒன்றைமட்டும் வைத்து அறிவை மதிப்பிடுவது நமக்குச் சரியென்று தோன்றவில்லை. மேலும் இவ் வடிகட்டும் முறையால் ஒருவித நன்மையும் முன்பு ஏற்பட்டதில்லை. இவ்வித நிலையில் இவ் வடிகட்டும் முறையை மேலும் நீடிக்கச் செய்வது ஏன் என்று நமக்குப் புரியவில்லை,

படிப்புத்தரம் குறைந்து விட்டதால், இதைப் புதுப்பிப்பது அவசியமாகிறது என்று கருதினால், அதற்கு இது சரியான வழியல்ல. இதற்கு மாறாக படிப்பு முறையைத் தலைகீழாக மாற்றுவது ஒன்றே சரியான வழியாகும். அப்பொழுது தான் நாம் விரும்பும் உயர்ந்த தரத்தைக் கல்வித் துறையில், நம் மாணவர்கள் பெறவும் முடியும் என்பது நம் கருத்து. ஆதலினால், இவ்வடிகட்டும் முறையை நீக்கி, கல்வியமைப்பை நல்ல வழிகளில் மாற்றியமைக்கும் வேலையைத் தொடங்க வேண்டுமென்று, நாம் அரசாங்கத்தை வேண்டுகிறோம்.

["பி. வி."]

★

## உலகில்.....

பிரெஞ்சு வீராங்கனை 'ஜோன்—ஆப்—அர்க்'பற்றி பிரபல பிரெஞ்சு சரித ஆசிரியர் ஜீன் கிரிமாட் ஒரு புதுவிளக்கம் தந்து, நூலொன்று வெளியிட்டுள்ளார். ஜோன் ஆப் ஆர்க் உயிரோடு கொளுத்தப்படவில்லையென்பது அவரது வாதம். வேறு ஒருத்தியை, முக்காடிட்டு கொளுத்தினரே தவிர, அவளைத் தீயிடவில்லையென்று வாதிடுகிறார். அவளைச் சுட்டெரித்ததாகக் கூறப்படும் நாட்களுக்குப்பின் ஐந்து வருடங்கழித்து 1436ல் லக்ஸம்பர்க்கில் அவள் திருமணம் செய்துகொண்டதாகவும் வாதிடுகிறார்.

★

# செய்திகள்

சலகண்டபுரம்:- 1, 3, 4, 11—10—52 தேதிகளில் நடைபெற்ற நெசவாளர் பொதுக்கூட்டங்களில் தி. மு. க. தோழர்கள் வி. செல்லப்பன், அர்த்தநாரி, கந்தசாமி, பழனிசாமி, கிருட்டிணன், கந்தசாமி, மேட்டூர் சின்னசாமி, மா. அர்த்தநாரி, (தி. க.) ஆகியோர் பேசினர்.

அதங்குடி:- 9—10—52ல் தி.மு.க. ஆண்டுவிழா அபிவிருத்திஸ்வரம் தோழர் பி. டி. அரசு தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசினர்.

சட்டக்கல்லூரி:- (சென்னை) தமிழ்ப்பேரவை திறப்புவிழா 16—9—52ல் மாணவர் தலைவர் வை. சேதுசோழயர் தலைமையில் நடைபெற்றது. தோழர் துரை அரங்கனர் M A., M-O. L. திறந்துவைத்தார். தோழியர் ஜி. சுப்புலட்சுமியின் இன்னிசை நடைபெற்றது. செயலாளர் முத்துமலைச்சாமி நன்றி கூறினர்.

சோலையார்ப்பேட்டை:- 12—10—52ல் தமிழ்ப் புலவர் கண்ணன் முன்னிலையில்முத்தமிழ்க் கழகம் நிறுவப்பட்டு புலவர் இராசகோபாலனரைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழுவும் அமைக்கப்பட்டது.

தொண்டமான்நல்லூர்:-19-9-52 பிரிவினைநாள். தோழர் முத்தையா தலைமையில் தோழர்கள் மு. இரத்தினம், த. காவேரி, செபாஸ்டியன் பேசினர். அப்துல்கனி, இபக்கப் பண்பாடினர். பல இடங்களில் கொடிகள் ஏற்றப்பட்டன.

விருதுநகர்:- அவ்வை சண்முகம் நாடக சபாவின் புத்தாண்டு செயற்குழுவுக்கு தி. மு. க. பேச்சாளர் விருதை ராமசாமி, எஸ்.எம். பாண்டியன், வைரவன் ஆகியோர் முறையே செயலாளராகவும் தலைவராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

நிலக்கோட்டை:- பாரதிதாசன் படிப்பக ஆண்டுவிழாவில் விருதை ராமசாமி, மதுரை எம். ஆர். கணேசன், குறள்தாசன் பேசினர்.

சிங்கிபுரம்:- 28-9-52ல் தோழர் பி. கந்தசாமி, M. L. A. தலைமையில் தி. மு. க. திறப்புவிழாவில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தில்லை வில்லாளன், M. P. சுப்பிரமணியம் M. L. A., அப்பாசாமி ஆகியோர் பேசினர்.

பம்பாய்:- 24—6—52ல் நடைபெற்ற ஆண்டுவிழா நிதிக்கமிட்டிக் கூட்டத்தில் அக்; 18, 19-ல் விழா நடத்துவதென்றும், தோழர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன் ஆகியோரை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

குள்ளம்பட்டி: (சேலம்) தி.மு.க.வின் முயற்சியால் அக்; 5-ல் கஞ்சித் தொட்டி ஒன்று, இங்கு திறக்கப்பட்டது. தி. மு. க. செயலாளர் ப. ராமலிங்கம் தலைவராகவும் தி. மு. க. உறுப்பினர்கள் அங்கத்தினர்களாகவும் சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஒக்கிலிபட்டி தி. மு. க. செயலாளர் வரதாசனும் கமிட்டியில் ஒரு அங்கத்தினர்: பஞ்சநிவாரண வேலையில் நமது கழகத்தோழர்கள் அரும்பணியாற்றிவருகிறார்கள்.

பொள்ளாச்சி தி. மு. க. சார்பில் 12ந் தேதி மாபெரும் ஊர்வலமும் நகரின் பல பகுதிகளில் கொடியேற்று விழாவும் தோழர் மு. கருணாநிதி அவர்களைக்கொண்டு நடத்திவைக்கப்பட்டது. மாலையில் தோழர் சாம்பசிவம் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினர். கே. ஆர். செல்லமுத்து பாடினர். கூட்டத்தில் 82 ரூபாய் தி. மு. க. (நிதி) நிதிக்காக வசூலாயிற்று.

ஆனைமலையில் 13—10—52 தோழர் மயில்சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் கே. ஆர். செல்லமுத்து பாடினர். தோழர் மு. கருணாநிதி அவர்கள் ஒரு மணி நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

கருணாநிதி
சுற்றுப் பிரயாணம்

18. வேலூர் (N. A.)
21. முத்தியாலுபேட்டை
25. கும்முடிபூண்டி
26. செங்கமேடு
27. சைதாபேட்டை
28. சென்னிமலை

நவம்பர் 1-முதல் 15-வரை ஓய்வு. 15, 16, தேதிகளில் பம்பாய்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

கான இலக்கணங்களை வகுத்தனர், கலைஞர்கள். அந்த முறைகளைக் கேட்கும்போது, கனவு போல இருக்கும் நமக்கு.

ஊசல் வரி
கந்துக வரி
ஆற்று வரி
கானல் வரி
மங்கல வாழ்த்து
சேருப்பறை
வள்ளைப் பாட்டு

இந்த வகைகளைக் கேட்கும்போது, விளங்காது விழிக்கிறோம், நாம்! ஆனால், இவை யனைத்தும், நமது பழம் பெருமையின் நிலைக்கண்ணாடிகள். மண் வீடு கட்டும் பருவமுதல் திருமண நிகழ்ச்சியிலிருந்து போர் நிகழ்ச்சி வரை, ஒவ்வொன்றையும் குறிக்கும் பாடல்கள் உண்டு! அந்தப் பாடல்களைப் பாணர்கள் இசைக்கும்போது, புலியும் அடங்குமாம்! பாம்பும் மயங்குமாம்!! இதனை அழகாக வர்ணிக்கும் "திணை மாலை நூற்றைம்பது" நமது தமிழில் உண்டு. அது செப்பும் ஒரு சிறு நிகழ்ச்சியைக் கேளுங்கள்!

மகளிர், தினைக் கொல்லையைக் காத்து நிற்கின்றனர், பரண்மீது இருந்தவண்ணம், கிளிகள், குருவிகளை விரட்டும்போது, அலுப்புத் தோன்றாமலிருக்க இனிமையான பண்களைப் பாடுவார்களாம். அந்த இசையின் மயக்கத்தில் கதிருண்ண வந்த பறவைகள் அப்படியே இருந்துவிடுமாம்! பறவைகள் மட்டுமல்ல, யானை முதலியவைகளும் உறங்குமாம்!! கூறுகிறது, அகநானூறு.

"ஒலியல் வார்மயிர்
ஊரினள் கொடிச்சி
பெருவரை மருங்கிற்
குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது
நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண்
பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளிறு
உறங்கும்"

இத்தகைய நல்லிசை நம்மவரிடம் இருந்தது! அவர்கள் கையாண்ட இசைக் கருவிகள் ஏராளம்!! இன்பம் இருந்தால்தானே இசை பொங்கும். வேண்டிய அளவு இன்பம் இருந்தது! மக்களைக் காக்க மன்னவனிருந்தான். வாணிபத்தாலும், போராலும், தமிழன்னையைச் சிறப்பிக்கும் வீரர்கள் உலவினர்கள். காதலித்தவனைக் கைப்பிடிக்கும் உரிமை, காதலிகளுக்கு இருந்தது. வறுமை இல்லை! வளம் கொழித்தது!! எங்கும் இன்பம். எங்கும் குதூகலம். தமிழ்மாதா கோலோச்சினாள்! பெரு மகிழ்வோடு வாழ்ந்தாள்!!

"குணகடல் குமரி
குடகம் வேங்கடம்
எனும் நான் கெல்லையின்
இருந்தமிழ்"

என்று, தமிழ் நிலம் பரவிக் கிடந்த பரப்பை நன்னூலின் சிறப்புப் பாயிரம் செப்புகிறது! சேரரும், சோழரும், பாண்டியரும் தமிழன்னைக்குச் சேவை செய்துகொண்டிருந்தனர்! ஒவ்வொருவருடைய சிறப்பையும் தனித் தனியே சொல்லலாம். மலைவளம் கொழித்தது, சேர மண்டலத்தில்! சோழன் பூமி நிலவளம் செறிந்தது! கடல்வளம் பெற்றவன் பாண்டியன்! இத்தகைய வளம் பெற்ற வாழ்வு இருந்தது, அன்றைய நாள் தமிழருக்கு! திருவிடத்தார், பிறகு கன்னடம், துளுவம், தெலுங்கு, மலையாளம் பேசும் மக்களாகப் பிரிந்தனர். இந்த உண்மைகளையெல்லாம், சரிதமும் வாழ்வும் கூறுகின்றன! புராதனக் கலாச்சாரம் முரசு கொட்டுகிறது! திராவிட இனம் — திரைகடல் தாண்டிப் புகழோச்சிய இனமென்பதை மறுப்பார் இல்லை. 'திராவிட மொழிகள்' எனக் குறிப்பிட்டு வியக்காதோர் இல்லை! அவ்வளவு நாகரிகமும், நல்வாழ்வும் பெற்றுச் சிறந்தோரின் வாழ்க்கையில், வேதனை எழும்பியதேன்? விசாரம் நிரம்பியதேன்? வாணிபத்துக்கும், வாட் போருக்கும், நாவாய் ஏறிச் சென்ற தமிழ் மகனின் இன்றைய கதி யாது? திராவிட நாட்டுச் செல்வன், இன்று அடைந்திருக்கும் நிலை என்ன? கலம் ஓட்டி, பொருள் ஈட்டினான்! புகழ் நாட்டினான்!! ஆனால் இன்று, தேயிலைத் தோட்டத்திலும், ரப்பர் காட்டிலும், சுரங்கத்துக்கு அடியிலும், வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான். "சீ! நீ கருப்பன்" என்று உதைத்து மடியும் அவனை, எள்ளி நகையாடுகிறான், ஆப்பிரிக்காவில், மலான். "ஏய்! நீ ஒரு பயங்கரவாதி" என்று, சுட்டுத் தள்ளுகிறது, வெள்ளை ஏகாதிபத்யம், மலேயாவில். "உனக்கு இங்கே இடமில்லை!" என்று, சிங்களம் விரட்டுகிறது! அதுமட்டுமா? திருவிடத்தார் நிலை! செப்பவும் நாகூசும். வேலும் வாளும் ஏந்தி வாழ்ந்த பரம்பரையெனும் விளக்கங்களை இலக்கியத்தில் கண்டுவிட்டு, அன்றன்றாடம் வரும் பத்திரிகைச் செய்திகளைக் கண்டால், இதயம் எரிமலையாகும். சிங்களம் அவன் விளையாடிய பூமி, ஒரு காலத்தில்! கொடி பறக்க நாவாய் ஏறி, முரசு ஒலிக்க, வாழ்த்துரை கிளம்ப அங்கே அவன் உலவிய நாட்கள் உண்டு! ஆனால், இன்று? யாழ்ப்பாணம் செல்ல 'திருட்டுத்தனமாக'த் தோணி பிடிக்கிறான். 'திருட்டுத்தனமாக'ச் செல்ல முயல்வதும் எதற்காக? திருடவா—அல்ல! அல்ல! கள்ளத்தனம் செய்யவா—இல்லவே இல்லை!! உழைத்து வாழ்வதற்காக. ஆமாம், உழைப்பதற்கு இடம் தேடுகிறான்! அன்னியச் செல்வத்தால், ஒருபோது, 'வளைந்த' அவன் தமிழ் நிலத்தில், அவனுக்கு இடமில்லை. மாற்றாரின் பருத்த தொந்திகளல்லவா, இப்போது, தமிழ்நிலத்தின்மீது விளையாடுகின்றன! எப்படி அவனுக்கு இடம் கிடைக்கும்? அழுத கண்ணீருடன், கள்ளத்தனமாக இலங்கை செல்ல முயல்கிறான். உண்மை, இது! அவ்விதம் முயன்றபோது, நால்வர் பிணமாயினராம், அண்மையில். 24 தமிழகக் காளைகள், 'உழைத்து வாழலாம்' என்று இலங்கையின்மீது ஆசை வைத்தனர். 'வராதே!' என்று, இலங்கை சர்க்கார் விடுக்கும் எச்சரிக்கைக் குரல் கண்டு மிரண்டதால், 'திருட்டுத்தனமாக'ச் செல்வதென்று முடிவுசெய்து, படகேறிச் சென்றனர். இலங்கைக் கரையை நெருங்கும் நேரம்! கரையில் காவலாளிகள் உலவுவதுபோல் தோன்றவே, பயந்து கடலில் குதித்தனர். விளைவு நால்வர் பிணம்! வாழச் சென்ற நால்வரின் உடல், இலங்கைக் கரையிலே, பிணமாகிக் கிடந்ததாம்! அந்த நால்வரும், திராவிடச் செம்மல்கள். தேள் எனக் கொட்டும் வறுமை, அவர்களை திருட்டுத்தனமாகச் செல்லத் தூண்டியது. திரைகடல் தாண்டி புரவிகளைக் கொணர்ந்த பரம்பரைதான். ஆனால் இப்போது! மலேயாக் காடுகளிலும்' ஆப்பிரிக்க வனங்களிலும், இலங்கைக் கடலிலும், பிணமாகிக்கொண்டிருக்கிறது!! நொந்து நைந்து, பிறந்த பூமியைவிட்டு ஓடுகிறது—சாகிறது!!

*

இந்த வேதனைகளை அனுபவிப்பவர்கள், நம்மவர்கள். திருவிடத்தின் குழந்தைகள்! நமது சகோதரர்கள்!! இவர்களது சாவு கேட்டதும், நமது இதயம் குமுறுகிறது. "ஆண்ட பரம்பரை, அனாதைப் பிணமாகிறதே!"—என்று உள்ளம் துடிக்கிறது. பழம் பெருமை கூறும் தமிழ் இலக்கியங்களைப் படித்தவர்கள், நாம்! அன்றைய வாழ்வையும் இன்றைய வீழ்ச்சியையும் ஒப்பிடும்போது எரிமலையாகிறோம். 'ஏனிந்த நிலை?' என்று கும்பி கொதிக்கிறது. வெளிநாடு சென்று பிணமாகும், திருவிடத்தவரின் குடும்பங்களிலே எழும்பும், "ஐயோ! மகனே, மாண்டாயோடா" எனும் அலறல், நமது காதுகளில் தமிழன்னையே புலம்புவதாக ஒலிக்கிறது! அதனால் துடிக்கிறோம்; கொதிப்படைகிறோம்; குமுறுகிறோம். "வளமிருந்தும் வாழ வழியில்லாததேன்? வாழ்ந்தவர் வீழ்ந்ததேன்?" என்று, நம்மையும் அறியாமல், ஆவேசம் கிளம்புகிறது. அன்பும் இனிமையும் நிறைந்த தமிழன்னையைப் பார்த்தால், அவள் தனது பழம் புகழைச் சொல்லிக்கொண்டே யிருக்கிறாள், ஏடுகள் மூலம்! ஏட்டைப் படித்துவிட்டு நாட்டை நோக்கும்போது, ஆத்திர

(2-ம் பக்கம் பார்க்க)

17-10-52 முதல்!

பாலைவனத்தைப்
பூஞ்சோலையாக்கப்
புதிய பாதை.........

நேஷனல் பிக்சர்ஸ்

பராசக்தி

செந்நெல்லும் பொன்னும் விளையும் பூமியிலே
சிந்தை நொந்திடும் வாழ்வு!
இதைச் சித்தரிக்கும் அற்புத ஓவியம்.

சென்னை: பாரகன் & அசோக்
மற்றும் தென்னாடெங்கும்.

திரைக் கதை வசனம்: மு. கருணாநிதி
ஸ்டுடியோ: ஏவிஎம்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு

நடிகர்கள்:
சிவாஜி கணேசன், எஸ். வி. சகஸ்ரநாமம், எஸ். எஸ். ராஜேந்திரன், வி. கே. ராமசாமி, டி. கே. ராமச்சந்திரன், ஸ்ரீரஞ்சனி, பண்டரிபாய், குமாரி கமலா, வி. சுசீலா.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.